DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

SESSIONS CASE NO. 562 / 2024

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Jayaprakash |
| Father / Husband Name | : Rameshbabu |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 04th day of November, 2025.

**(A2 to A6 are present. A1 produced on VC)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை** :

நான் தற்போது கொண்டக்கரையில் வசித்து வருகிறேன். நான் Contract மற்றும் Transport தொழில் செய்து வருகிறேன். திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸில் செயலாளராக உள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அஷ்வத்தாமன் என்பவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது. நான் புகார்

எதுவும் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் என்னுடையது அல்ல. எனக்கு தமிழ் எழுத தெரியாது. என்னுடைய தாய்மொழி தெலுங்கு. புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. புகாரில் குறிப்பிட்டுள்ள போன் நெம்பர் என்னுடையது ஆகும். மற்றபடி புகாரில் உள்ள எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலீசார்என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 06/02/2023 ஆம் தேதி அன்று எனக்கு ஏற்பட்ட சம்பவம் குறித்து 04/08/2023 அன்று புகார் கொடுத்தேன் என்றும், அந்த புகாரில் நான் IOCL Contracter என்றும் கடந்த 06/02/2023 அன்று மீஞ்சூர் கொண்டக்கரை பகுதியில் IOCL Site ல் இருந்தபோது நெ. 1 எண் பதிவெண் கொண்ட காரில் 3 இருசக்கர வாகனங்களில் பட்டமந்திரியை சேர்ந்த அச்சுதன், புகழ், செல்வா, நரேஷ், நந்தா ஆகியோர்கள் Siteக்குள் வந்து அத்துதன் மற்றும் புகழ் தனியாக பேச வேண்டும் என்று அழைத்ததாகவும், அண்ணன் பணம் வாங்கி வரவேண்டும என்று சொன்னார் என்றும் தொடர்ந்து அவர்கள் வந்த வண்டியின் என்னை கட்டாயப்படுத்தி இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வியாசர்பாடியில் குடியிருப்பில் உள்ள ஒரு வீட்டிற்கு அழைத்து சென்றார்கள் என்றும் அங்கே மாநிறத்தில் குண்டாக இருந்த ஒருநபர் மற்றும் சிலர் இருந்தார்கள் என்றும் அவர் நீ தான் JP ஆ என்று கேட்க ஆமாம் நான் தான் JP என்று கூறினேன் என்றும், அவர் தன்னை அஜ்வத்தாமன் கேள்விபட்டிருக்கிறாயா என்று கேட்டார் என்றும் நான் தெரியும் என்று சொன்னேன் என்றும் அவரிடம் IOCL Contract செய்கிறேன் என்று சொல்லவும் மாதம் எவ்வளவு வரும் என்று கேட்கவும் நான் அவரிடம் வருமானத்திற்கு ஏற்றார் போல் செலவு வரும் என்று சொன்னேன் என்றும்,

அவர் இங்குள்ள எல்லா கம்பெனியும் எனக்கு மாமூலம் தருகிறார்கள் என்றும் நீயும் எனக்கு மாமூலம் தரவேண்டும் என்றும் மாதாமாதம் மாமூலம் கொடுத்தால் உனக்கு பிரச்சனையில்லாம் தொழில்போகும் இல்லை என்றால் மொத்த தொழிலையும் காலிபன்னிவிடுவேன் என்றும் உயிர் வாழ ஆசையிருந்தால் நான் சொன்னபடி நடந்துகொள் என்றும் ஒரு பிஸ்டல் கைதுப்பாக்கியை எடுத்து டேபிள் மீது வைத்துவிட்டு உனக்கு குடும்பம் இருக்கிறது அதை மனதில் வைத்துக்கொண்டு எங்களுக்கு என்னபண்ண வேண்டுமோ அதை செய் என்றும் அவர் கூட இருந்தவர்கள் அண்ணன் சொல்கிறமாதிரி நடந்துகொள் இல்லை என்றால் உயிர் இருக்காது என்று சொல்லி பாக்கெட்டிலிருந்த ரூபாய் 10 ஆயிரத்தை எடுத்துக்கொண்டு போனை மட்டும் திரும்ப கொடுத்தார்கள் என்றும் மேலும் இந்த பிஸ்டலை வைத்து கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறேன் என்று சொன்னதாகவும் உன் உயிர் உன்னிடம் இருக்காது என்று மிரட்டி அங்கிருந்து என்னை வெள்ளை நிற Ford Endavor 4946 என்ற காரில் என்னை Site கொண்டு விட்டார்கள் என்றும் அவர்கள் பிஸ்டல் வைத்து மிரட்டியதால் புகார் கொடுத்தால் ஏதாவது செய்துவிடுவார்கள் என்று பயந்திருந்தேன் ஆனால் தற்சமயம் செங்குன்றம் எதிரி சீனிவாசன், அம்பத்தூர் மின்ட் ரமேஷ் ஆகியோர்கள் பணம் பறித்ததற்காக சிறையில் அடைத்ததை பார்த்து தைரியமாக என்னுடைய பிரச்சனை தீர்ந்துவிடும் என்று 04.08.2023 அன்று மீஞ்சூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அன்றைய தினமே போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து புகார் கொடுக்கவில்லை என்றும் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

04/08/2023 அன்று பொன்னேரி நீதித்துறை நடுவர் முன்பு எதிரிகளை அடைப்பு காவல் உத்தரவு பிறப்பிக்கும்போது சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று கூறினேன்

என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதியரசர் முன்பும் நேரடி விசாரணையில் சம்பவமே நடைபெறவில்லை என்று கூறினேன் என்றால் சரிதான். வேறு சாட்சிகள் யாரையும் எனக்கு தெரியாது.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.